பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

05 04 2024 7 15

வெள்ளிக்கிழமை காலை

## தலைப்புச் செய்திகள்

1. மக்களவைக்கு இரண்டாம் கட்டமாக தேர்தல் நடைபெற உள்ள 88 தொகுதிகளில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை இன்று நடைபெறுகிறது.

2. ஜார்கண்ட், ஒடிசா, பீகார், ஆந்திரப்பிரதேசம் மற்றும் அசாம் மாநிலங்களில் 20 மாவட்டங்களைச் சேர்ந்த பல்வேறு ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ். அதிகாரிகளை தேர்தல் ஆணையம் பணியிட மாற்றம் செய்துள்ளது.

3. சென்னை அருகே நேற்று கடலில் படகு கவிழ்ந்து தத்தளித்துக்கொண்டிருந்த 8 மீனவர்களை இந்திய கடலோர காவல்படை மீட்டது.

4. கம்போடியாவில் பணி செய்ய விரும்புவோர் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மூலமாகவே செல்ல வேண்டும் என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்றது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

மக்களவைக்கு இரண்டாம் கட்டமாக தேர்தல் நடைபெற உள்ள 88 தொகுதிகளில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை இன்று நடைபெறுகிறது.

கேரளாவில் 20, கர்நாடகாவில் 14, ராஜஸ்தானில் 13, உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் தலா 8 தொகுதிகளுக்கும், மத்தியப்பிரதேசத்தில் 7, அசாம் மற்றும் பீகாரில் தலா 5, மேற்குவங்கம் மற்றும் சத்தீஸ்கரில் தலா 3, திரிபுரா மற்றும் ஜம்மு-கஷ்மீரில் ஒரு தொகுதியிலும் இரண்டாம்கட்டமாக வரும் 26ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

ஜம்மு-கஷ்மீரில் மட்டும் வேட்புமனு மீதான பரிசீலனை நாளை நடைபெற உள்ளது.

12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட இந்த தொகுதிகளில் வேட்புமனுக்களை விலக்கிக்கொள்ள வரும் 8ஆம் தேதி கடைசி நாளாகும்.

இதற்கிடையே அசாமில் 65 வேட்பாளர்கள் மனுதாக்கல் செய்துள்ளனர்.

பீகாரில் 86 வேட்பாளர்கள் வேட்புமனு தக்கல் செய்த நிலையில் அதிகபட்சமாக பகல்பூர் தொகுதியில் 21 வேட்பாளர்கள் மனுதாக்கல் செய்துள்ளனர்.

ராஜஸ்தானில் 304 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அதிகபட்சமாக ஜலோர் தொகுதியில் 29 வேட்பாளர்களும், குறைந்தபட்சமாக ஜலாவர்-பரன் தொகுதியில் 7 வேட்பாளர்களும் மனுதாக்கல் செய்துள்ளனர்.

<<<<>>>>

கடந்த தேர்தலில் வாக்குப்பதிவு சதவீதம் குறைந்த மாநகராட்சிப் பகுதிகளில் வாக்குப்பதிவை அதிகரிப்பது குறித்து சம்பந்தப்பட்ட ஆணையர்களுடன் தேர்தல் ஆணையம் இன்று ஆலோசிக்க உள்ளது.

புதுதில்லியில் தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ் குமார் தலைமையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில் சென்னை, தில்லி, மும்பை, பெங்களூரு, ஹைதராபாத், அகமதாபாத், புனே, தானே, நாக்பூர், பட்னாசாஹிப், லக்னோ மற்றும் கான்பூர் மாநகராட்சி ஆணையர்கள் பங்கேற்க உள்ளனர்.

அத்துடன் பீஹார், உத்தரப்பிரதேச மாநிலங்களில் குறிப்பிட்ட மாவட்ட தேர்தல் அதிகாரிகளும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ள உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மக்களவைத் தேர்தலில் குஜராத் மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிடும் 3 பேர் கொண்ட வேட்பாளர் பட்டியலை அக்கட்சி வெளியிட்டுள்ளது.

அதன்படி வதோதரா தொகுதியில் திரு. **Jashpalsinh Padhiyar** வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

**Junagadh** தொகதியில் ஹீராபாய் ஜோத்வாவும், சுரேந்தர்நகர் தொகுதியில் **Rutvikbhai Makwana**வும் காங்கிரஸ் சார்பில் போட்டியிடுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஜார்கண்ட், ஒடிசா, பீகார், ஆந்திரப்பிரதேசம் மற்றும் அசாம் மாநிலங்களில் 20 மாவட்டங்களைச் சேர்ந்த பல்வேறு ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ். அதிகாரிகளை தேர்தல் ஆணையம் பணியிட மாற்றம் செய்துள்ளது.

ஜார்கண்ட் மாநில காவல்துறை பணியில் இருந்த திரு. கைலாஷ் கர்மாலியை ராஞ்சி போக்குவரத்து காவல்துறை கண்காணிப்பாளராக நியமித்துள்ளது.

<<<<>>>>

சென்னை அருகே நேற்று கடலில் படகு கவிழ்ந்ததில், அதில் தத்தளித்துக்கொண்டிருந்த 8 மீனவர்களை இந்திய கடலோர காவல்படை மீட்டது.

மொத்தம் 10 மீனவர்கள் அந்தப் படகில் பயணம் செய்த நிலையில் ஒருவர் உயிரிழந்ததாகவும், காணாமல் போன மற்றொருவரை தேடும் பணி நடைபெற்று வருவதாகவும் இந்திய கடலோர காவல்படை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மக்களவைத் தேர்தலையொட்டி தமிழகத்தில் காஞ்சிபுரம் மக்களவைத் தொகுதியில் மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் பாதுகாப்புப் பணி குறித்து மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. சண்முகம் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<>>>>

கம்போடியாவில் பணி செய்ய விரும்புவோர் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மூலமாகவே செல்ல வேண்டும் என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கம்போடியாவில் பணியில் அமர்த்துவதாகக் கூறி ஆட்கடத்தில் நடைபெறுவதாக எச்சரித்துள்ளது.

அவர்களை ஆன்லைன் நிதி மோசடி மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதாகவும் கூறியுள்ளது.

எனவே பணிக்குச் செல்லும் நிறுவனத்தின் முழுமையான தகவல்களை அறிந்துகொண்டு செல்லுமாறு அறிவுறுத்தியுள்ளது.

கம்போடியாவில் உள்ள இந்தியா தூதரகம், அந்நாட்டு அரசுடன் இணைந்து பாதிக்கப்பட்டுள்ள இந்தியர்களுக்கு உதவி வருவதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

குடியுரிமை திருத்தச் சட்டம் குறித்து திரிணாமுல் காங்கிரஸ், மக்களை தவறாக வழிநடத்தி வருவதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மேற்குவங்க மாநிலம் **Coochbehar**-ல் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், மேற்குவங்க அரசு மத்திய அரசின் பல்வேறு திட்டங்களை மறைத்து வரவதாக குற்றம் சாட்டினார்.

இந்நிலையில் **Coochbehar**-ல் **Matabanga** என்ற இடத்தில் பிரச்சாரம் மேற்கொண்ட திரிணாமுல் காங்கிரஸ் கட்சித் தலைவரும், மேற்குவங்க முதலமைச்சருமான செல்வி மம்தா பானர்ஜி, தமது மாநிலத்தில் குடியுரிமை திருத்தச் சட்டம் அமல்படுத்தப்படமாட்டாது என்று குறிப்பிட்டார்.

<<<<>>>>

மக்களவைத் தேர்தலையொட்டி தூர்தர்ஷன் மற்றும் ஆகாஷ்வாணியில் அங்கீகரிக்கப்பட்ட 6 தேசிய கட்சிகள் தங்களது கருத்துகளை தெரிவிப்பதற்கான ஒளிபரப்பு நேரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஒவ்வொரு தேசிய கட்சிக்கும் 45 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இம்மாதம் 16 மற்றும் 23ஆம் தேதிகளிலும், அடுத்த மாதம் 3, 10, 17, 22, 29 ஆகிய தேதிகளிலும் தேசிய கட்சிப் பிரதிநிதிகளின் கருத்துகள் ஒளிபரப்பப்படும்.

<<<<>>>>

கடந்த 10 ஆண்டுகளில் தனிநபர் வருமான வரியை பிஜேபி தலைமையிலான மத்திய அரசு கணிசமாக உயர்த்தியுள்ளது என்று காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. ப. சிதம்பரம் குற்றம் சாட்டியுள்ளார்.

வடசென்னை மக்களவைத் தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், காலாண்டுக்கு 20 ஆயிரம் கோடிக்கு மேல் வருமானம் ஈட்டும் பெரு நிறுவனங்களுக்கு 22 சதவீத வரி விதிக்கப்பட்ட நிலையில் ஆண்டுக்கு 2 லட்சம் ரூபாய் முதல் 3 லட்சம் ரூபாய் வரை வருவாய் ஈட்டும் தனிநபருக்கு 33 சதவீதம் வரி விதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் தேர்தல் வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குறை கூறியுள்ளார்.

நீலகிரி மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட மேட்டுப்பாளையத்தில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், தமிழகம் சிறந்து விளங்குவதற்கு அஇஅதிமுக அரசு மேற்கொண்ட முயற்சிகளே காரணம் என்று தெரிவித்தார்.

தமிழக மக்களின் நலனுக்காக மத்திய அரசிடம் இருந்து தேவையான நிதியை பெறவேண்டும் என்பதே தமது கட்சியின் நிலைப்பாடு என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

<<<<>>>>

மத்தியில் பிஜேபி அரசு தேர்தல் வாக்குறுதிகளை முழுவதுமாக நிறைவேற்றி உள்ளதாக அக்கட்சியின் மாநில தலைவர் திரு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் பரமத்தியில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

திமுக ஆட்சிக்கு வந்த 33 மாத காலத்தில் எந்தவித மக்கள் நலத்திட்டங்களையும் செயல்படுத்தவில்லை என்று அவர் கூறினார்.

அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசியும் உயர்ந்துவிட்டதாக அவர் குற்றம் சாட்டினார்.

மத்திய அரசின் முத்ரா கடன் திட்டம், மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், குடிநீர் திட்டம் ஆகியவை சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு. அண்ணாமலை தெரிவித்தார்.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்றது.

அகமதாபாதில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட்செய்த குஜராத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 199 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக கேப்டன் ஷுப்மன் கில் 48 பந்துகளில் 89 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

200 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய பஞ்சாப் அணி, 19 புள்ளி 5 ஓவரில் 7 விக்கெட்டை இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

ஹைதராபாதில் இன்று நடைபெற உள்ள போட்டியில் சென்னை அணி – ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் சென்னை அணி 2-1 என்ற கோல் கணக்கில் ஜம்ஷெட்பூர் அணியை வென்றது.

சென்னையில் நடைபெற்ற இப்போட்டியில் ரஹீம் அலி, **Rafael Crivellaro** ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர்.

**<<<<>>>>**

அமெரிக்காவில் ஹூஸ்டன் நகரில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி – ஜெர்மனியின் **Begemann** இணை அரை இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிச் சுற்றில் இந்த இணை, 6-0, 6-3 என்ற செட் கணக்கில் இந்தியாவின் அர்ஜுன் கதே - ஜீவன் நெடுஞ்செழியின் இணையை வென்றது.

**<<<<>>>>**

மொராக்கோவில் நடைபெற்ற வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி – பிரான்சின் அல்பெனோ இணை அரை இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 7-6, 6-7, 10-7 என்ற செட் கணக்கில் கொலம்பியாவின் நிக்கோலஸ் - பிரேசிலின் ரஃபேல் மத்தோஸ் இணையை வென்றது.

**<<<<The End>>>>**